**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2025ம் ஆண்டு ஜீலை மாதம் 14ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | -திரு.கதிர்வேல் | **PW-7** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | -நாச்சிமுத்து | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | -56 |

**(எதிரி ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் நக்சல் சிறப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2020 ஆம் வருடம் சித்தோடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது 11.09.2020 தேதியில் சித்தோடு நிலைய தலைமை காவலர் 2049 திரு பாலசுப்பிரமணியம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.669/2020 சட்டப்பிரிவுகள் இதச பிரிவுகள் 279, 337 கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை பெற்று உதவி ஆய்வாளர் திரு.சஞ்சீவ் மூர்த்தி புலன் விசாரணை ஆரம்பிக்கும் முன்பே விபத்தில் காயப்பட்ட ஹர்ஷிதா என்பவர் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததால் அவர் வழக்கின் சட்ட பிரிவை இதச பிரிவுகள் 279, 304(**A**) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி உதவி ஆய்வாளர் சஞ்சீவி மூர்த்தி இறந்துவிட்டார். அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் ஆனது.

பின்னர் இந்த வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 11.09.2020 அன்று பகல் 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் குமார், தென்னரசு ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த சாட்சிகளின் வாக்குமூலமும் பதிவு செய்தேன். அந்தப் பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்பு சாட்சிகள் சந்திரசேகரன், சுகன்யா, சிவசங்கர், விஸ்வநாதன், பழனியம்மாள் மற்றொரு சந்திரசேகரன் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அங்கிருந்த புறப்பட்ட ஈரோடு தலைமை அரசு அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கல் இருந்த ஹர்ஷிதாவின் சடலத்தை பார்வையிட்ட பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பகல் 1.45 மணி முதல் 3.45 மணி வரையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன், விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் இறப்புக்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு காவலர் திரு ரி.சார்லஸ் என்பவர் மூலம் இறந்து போன ஹர்ஷிதாவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய கோரி வேண்டுகோள் கடிதத்தை மருத்துவருக்கு கொடுத்து அனுப்பினேன்.

பின்னர் 14.09.2020 எதிரி முருகேசன் என்பவர் தன்னிச்சையாக நிலையம் ஆனாவரை கைது செய்து தக்க ஜாமீனில் பிணையில் விடுவித்தேன். பின்னர் சாட்சி வரதராஜன் என்பவரை விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்திருக்கான பணி நியமனச் சான்று பெற்றேன். அந்த சான்று **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் அரசு பேருந்து **TN** 30 **N** 1206 வாகனத்தின் பதிவு எண்ணை ஆராய்ந்து வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தினேன். பின்பு 21.09.2020 தேதி இவ்வழக்கில் காயம்பட்ட சுகன்யா ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் ஹீரோ ப்ளஸ்ஸர் **TN** 33 **BS** 7733 என்ற வாகனத்தில்

பதிவேடுகளை சரி பார்த்து மோட்டார் வாகன ஆய்வாளரின் பார்வைக்கு உட்படுத்தினேன். பின்பு 11.01.2021 தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு சிவகுமாரை விசாரித்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகள் பெற்றேன் அந்த ஆய்வறிக்கைகள் **அ.சா.ஆ. 8 மற்றும் 9**. அரசு தலைமை மருத்துவமனை சென்று மருத்துவர் திரு ஜெயச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்து போன ஹர்ஷிதாவின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10**. பின்னர் நிலையம் திரும்பி காவலர் திரு லிஜீ சார்லஸ், தலைமை காவலர் பாலசுப்பிரமணியம், உதவி ஆய்வாளர் சஞ்ஜீவ மூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணை முடித்து எதிரி முருகேசன் என்பவர் மீது இதச 279, 304(A) பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கின் புகார்தாரர் சந்திரசேகரன் இறந்து போன ஹர்ஷிதாவின் பெரியப்பா என்றால் ஆமாம். மேற்படி புகாரின் படி பேருந்து இரு சக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதியதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கையில் இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் சேதங்கள் ஏற்பட்டதாக குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரி. சந்திரசேகரனின் 161 வாக்குமூலத்தின் படி அவர் பிரேத விசாரணையின் போது தான் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பு உதவி ஆய்வாளர் அவரை விசாரித்துள்ளார், நான் பிரேத விசாரணை போது அவரை விசாரித்தேன். உதவி ஆய்வாளர் சந்திரசேகரனை விசாரித்து பதிவு செய்த 161 வாக்குமூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. அவ்வாறு உதவி ஆய்வாளர் விசாரித்து பதிவு செய்த 161 வாக்குமூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் உள்ளதா என்றால் குறிப்பிட்ட காரணம் ஏதுமில்லை. இந்த வழக்கில் எதிரியின் பெயர்

பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ளதால்தான் உதவி ஆய்வாளர் பதிவு செய்த 161 வாக்குமூலம் இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும் நான் பதிவு செய்த 161 வாக்குமூலம் மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்து அமராவதி பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்றுள்ளது என்றால் பேருந்து நிறுத்தத்தின் அருகில் நடைபெற்றுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் அந்த பேருந்து நிறுத்தம் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அமராவதி பஸ் நிறுத்தம் விபத்து நடந்த இடத்திற்கு வலது புறமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்த சாலையில் உள்ள ஸ்பீட் பிரேக்கர் மீது இறந்து போன ஹர்ஷிதாவின் தாயார் சுகன்யா இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றபோது அவர் நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவானாலோ அஜாக்கிரகினாலும் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் மேற்படி சொன்ன விபரங்களுக்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இடையே முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**